IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 94 /2020
Deposition of witness for PW1

Name : ஈஸ்வரி

Husband Name : முருகானந்தம்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 11 day of July, 2023.

குறுக்கு விசாரணை

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் தற்பொழுது வீட்டில் தான் உள்ளேன். இதற்கு முன்பு உடல்நிலை சரியாக இருந்தபோது பீடி வேலை செய்துவந்தேன். நான் மேற்படி தொழில் செய்ததற்கான எதேனும் ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி தரணிக்கு எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் 12.6.2020 அன்று ரூ.30,000/-ஐ என் வீட்டில் வைத்து கடன் கொடுத்தேன். நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்த போது யாரெல்லாம் உடனிருந்தார்கள் என்றால் என்கணவர் முருகானந்தம் மற்றும் என் பிள்ளைகள் விஷ்ணு முருகன், ஸ்வேதா மற்றும் ஹரிமுருகன் ஆகியோர் இருந்தார்கள்.

2. பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததற்கு ஆதரவாக அச்சிடப்பட்ட கடனுறுதிசீட்டு எழுதிப்பெற்றேனா அல்லது பத்திரம் எழுதி வாங்கினேனா என்றால் 20 ரூபாய் பாண்டில் தான் எழுதி வாங்கினேன். எத்தனைபேர் அதில் சாட்சி கையொப்பம் இட்டார்கள் என்றால் என் கணவர் முருகானந்தம் மட்டுந்தான் சாட்சியாக கையொப்பமிட்டார். அந்த பத்திரத்தை யார் எழுதினார் என்றால் கார்த்தி என்பவர் எழுதினார். பிரதிவாதியை நான் நேரில் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன் அவர் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்.

3. பிரதிவாதியின் அக்கா தேவி என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதியின் அக்கா தேவியும், என் கணவர் முருகானந்தமும் சேர்ந்து எதிரிடை கிரைய ஒப்பந்தம் செய்துகொண்டார்கள் என்றால் சரிதான். எவ்வளவு தொகைக்காக மேற்படி கிரைய

ஒப்பந்தம் செய்துகொண்டார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. பிரதிவாதி தரணி, தன்னுடைய அக்கா தேவி பெற்ற கடனுக்கு பொறுப்புறுதியாக என்னுடைய கணவருக்கு கொடுத்திருந்த வெற்றுப்பத்திரத்தை கொடுத்திருந்தார் என்றும், வட்டி செலுத்தாததால் மேற்படி வெற்றுப்பத்திரத்தை பயன்படுத்தி அதிக வட்டி வசூலிக்கும் நோக்கத்தில் பிரதிவாதி மீது நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. வட்டிக்காக கொடுத்திருந்த வெற்றுப்பத்திரத்தை இவ்வழக்கிற்காக போலியாக தயாரித்து இவ்வழக்கு போட்டுள்ளேன் என்றும், ஆதலால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல. தற்பொழுது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ1-ஐ என் கணவர் முருகானந்தம் தட்டச்சு செய்து கொண்டுவந்தார். வா.சா.ஆ1-ல் பிரதிவாதியின் கையொப்பம் கையெழுத்து என்பதற்கு கீழே இடைவெளி விட்டு காணப்படுவதால் வழக்கிற்காக போலியாக வா.சா.ஆ1-ஐ நான் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. நான் பிரதிவாதிக்கு உண்மையிலேயே வா.சா.ஆ1-ன் அடிப்படையில் கடன் கொடுத்திருக்கும் பட்சத்தில் 3ம் நபரிடம் சாட்சி கையொப்பம் பெற்றிருப்பேன் என்றால் சரியல்ல. என் பிள்ளைகள் உடனிருந்ததாக நான் கூறுவது போல் இருந்திருந்தால் அவர்களிடம் நான் சாட்சி கையொப்பம் பெற்றிருப்பேன் என்றால் அப்பொழுது என் பிள்ளைகளுக்கு வயது முதிர்வு இல்லை. பிரதிவாதியின் அக்கா தேவி பெற்றிருந்த கடன்தொகைக்கு ஆதரவாக பொறுப்புறுதியாக பிரதிவாதி கொடுத்திருந்த வெற்றுப்பத்திரத்தை தவறாக பயன்படுத்தி போடப்பட்ட இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

K VENKATESAN Digitally signed by K VENKATESAN

DISTRICT MUNSIF

KATPADI.